**செய்தி வெளியீடு எண்: 088** **நாள்: 02.02.2019**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (02.02.2019) சேலம் மாவட்டம், எடப்பாடியில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

இன்றையதினம் விவசாயிகளுடைய நலன் கருதி, விவசாயிகள் விளைவித்த நெல்லை கொள்முதல் செய்வதற்காக பூலாம்பட்டி மற்றும் தேவூரில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் துவக்க விழா, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, ஏற்கனவே நடைபெற்ற திட்டப் பணிகளுக்கு திறப்பு விழா மற்றும் அரசு நலத் திட்டங்கள் வழங்குகின்ற சிறப்பான நிகழ்ச்சியில் வருகை தந்துள்ள அனைவருக்கும் பணிவான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோலாம்பட்டியிலும், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சங்ககிரியிலும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் சார்பில் 2 நேரடி கொள்முதல் நிலையங்களை இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. வரலாற்றிலேயே முதல் முறையாக விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று சேலம் மாவட்டம், எடப்பாடி வட்டம், பூலாம்பட்டி கிராமத்திலும் மற்றும் சங்ககிரி வட்டம், தேவூர் கிராமத்திலும் விவசாயிகள் பயனடையும் வகையில் மாண்புமிகு அம்மாவின் அரசால் 2 நேரடி நிலையங்கள் இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் நிர்ணயித்த விலை சன்ன ரகம் குவின்டால் ஒன்றுக்கு ரூ.1770—ம், பொது ரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரு. 1750—ம் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மாவின் அரசு, விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு கூடுதல் விலை கிடைக்கும் வகையில், மாநில அரசு சார்பில் ஊக்கத் தொகையாக, சன்ன ரகம் குவின்டால் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.70—ம், பொது ரகத்திற்கு குவின்டால் ஒன்றுக்கு கூடுதலாக ரூ.50—ம் வழங்க ஆணையிட்டு அதன்படி விவசாயிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் இன்றையதினம் துவக்கிவைக்கப்பட்ட நேரடி

நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் விளைவித்த நெல்லை நேரடியாக விற்பனை செய்யும்பொழுது, விவசாயிகள் சன்னரகம் குவின்டால் ஒன்றுக்கு ரூ.1840–ம், பொது ரகம் குவின்டால் ஒன்றுக்கு ரூ.1800–ம் அதிகமான விலை கிடைக்கும். எனவே, விவசாயிகள் விளைவித்த நெல்லினை இந்த அரசு நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு சேலம் மாவட்டத்தில் புளியங்குறிச்சி மற்றும் புத்தரகவுண்டன்பாளையம் ஆகிய கிராமங்களில் நேரடி கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, 2513 விவசாயிகளிடமிருந்து 467.920 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு ரூ.7 கோடியே 75 லட்சம் 77 ஆயிரத்து 544 வழங்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம், இந்த விழாவின் மூலமாக, திறந்து வைக்கப்பட்ட, முடிவுற்ற பணிகள் சிலவற்றை குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் எடப்பாடி ஊராட்சி ஒன்றியம், இருப்பாளி ஊராட்சி செவிடனூரிலும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோணசமுத்திரம் ஊராட்சி, கனியாம்பட்டியிலும், நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியம், கோனூர் ஊராட்சிக்குட்பட்ட கருங்கரடு மற்றும் மோட்டாண்டிக்கரை ஆகிய நான்கு இடங்களில் தலா ரூ. 8.50 லட்சம் வீதம் ரூ.32 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 4 புதிய அங்கன்வாடி மையக் கட்டிடங்கள் இன்றையதினம் என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம், இந்த விழாவின் சார்பாக வழங்கப்படுகின்ற நலத் திட்ட உதவிகள், வருவாய்த் துறையின் சார்பில் 253 பயனாளிகளுக்கு, ரூ. 24 லட்சத்து 44 ஆயிரத்து 500

மதிப்பீட்டில் இலவச வீட்டு மனைப் பட்டாக்கள், விவசாய கூலி உதவித் தொகை, முதியோர் விதவை உதவித் தொகை மற்றும் நகர நிலவரித் திட்ட பட்டாக்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் சார்பில் 150 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 5 லட்சம் மதிப்பீட்டில் முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டவதற்கான மானியமும், பிரதம மந்திரி குடியிருப்புத் திட்ட நிதியும், தூய்மை பாரத இயக்கத்தின் கீழ் தனி நபர் இல்ல கழிப்பறை கட்டுவதற்கான நிதியும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 534 நபர்களுக்கு ரூபாய் 3 கோடியே 14 லட்சத்து 63 ஆயிரம் பயிர்க் கடன் மற்றும் மத்திய கடனுதவியும், கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில், விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 400 பயனாளிகளுக்கு ரூபாய் 1 கோடியே 56 லட்சத்து 52 ஆயிரம் மதிப்பீட்டில் விலையில்லா கறவை மாடுகளும் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மைத் துறையின் சார்பில், 100 விவசாயிகளுக்கு ரூபாய் 6 லட்சத்து 74 ஆயிரம் மதிப்பீட்டில் இயந்திர நடவு நிதி உதவி, செயல்விளக்கத் திடல் அமைக்க நிதியுதவி மற்றும் பேட்டரியில் இயங்கும் விசை தெளிப்பான் கருவியும், தோட்டக்கலைத் துறையின் சார்பில், 100 விவசாயிகளுக்கு ரூபாய் 27 லட்சத்து 69 ஆயிரம் மதிப்பீட்டில் கூட்டுப்பண்ணைத் திட்டம், நுண்ணுயிர் பாசனத் திட்ட மானிய நிதியுதவியும், வேளாண் பொறியியல் துறையின் சார்பில், கிராம வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையங்கள் அமைக்கும் திட்டத்தின் கீழ் இரண்டு குழுவிற்கு ரூபாய் 8 லட்சத்து 35 ஆயிரத்து 800 மதிப்பீட்டில் வேளாண் கருவிகள் வாங்குவதற்கான மானியம், வனத் துறையின் சார்பில் வனக்குழு நிதியிலிருந்து 1 பயனாளிக்கு ரூபாய் 15 ஆயிரம் மதிப்பில் சிறு தொழில் தொடங்குவதற்கான கடனுதவி. சமூக நலத் துறையின் சார்பில் 20 பயனாளிகளுக்கு ரூபாய் 5 லட்சம் திருமண நிதியுதவியுடன் திருமாங்கல்யத்திற்கு தலா 8 கிராம் தங்கம். பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பில் 15 பயனாளிகளுக்கு ரூபாய் 60 ஆயிரத்து 700 மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டிகள் மற்றும் விலையில்லா தையல் இயந்திரங்கள்.

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறையின் சார்பில், 1 பள்ளி மாணவிக்கு ரூபாய் 200 மதிப்பிலான கண் கண்ணாடி. மகளிர் திட்டம் சார்பில், ரூபாய் 6 கோடியே 2 லட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் 450 மகளிர் சுய உதவிக் குழுக்கு நேரடி கடனுதவியும், உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகன மானியமும், இத்திட்டத்தின் கீழ் ஒரு மகளிருக்கு மானிய நிதியுதவியும், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில், 10664 பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ரூபாய் 3 கோடியே 96 லட்சத்து 70 ஆயிரத்து 100 மதிப்பிலான 10664 விலையில்லா மிதிவண்டிகளும், மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 10 மாற்றுத் திறனாளிகளுக்கு, ரூபாய் 6 லட்சத்து 25 ஆயிரத்து 100 மதிப்பிலான இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் அதிநவீன செயற்கை அவயமும், என மொத்தம் இன்றையதினம், இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, 12701 பயனாளிகளுக்கு ரூபாய் 16 கோடியே 54 லட்சத்து 26 ஆயிரத்து 400 மதிப்பிலான பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**அடிக்கல் நாட்டி வைக்கப்பட்ட திட்டங்கள்**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் மாவட்ட ஊரக முகமையின் சார்பில், மேட்டூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நங்கவள்ளி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 79 லட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டடம் கட்டும் பணியும்,

ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காடையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்ட வருவாய் இனங்கள் திட்டத்தின் கீழ் ரூபாய் 2 கோடியே 77 லட்சம் மதிப்பீட்டில் புதிய அலுவலகக் கட்டடம் கட்டும் பணிக்கும்,

வீரபாண்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம், ஜருகுமலை மலைவாழ் மக்களின் தேவைக்காக நபார்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 9 கோடி மதிப்பீட்டில் புதிய சாலை அமைக்கும் பணிகளுக்கும்,

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறையின் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத் துறை சார்பில், கொங்கணாபுரம் வட்டாரம், சமுத்திரம் ஊராட்சியிலுள்ள புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ரூபாய் 60 லட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்டும் பணிகளுக்கும்,

வனத் துறையின் சார்பில், ஏற்காடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குறுவம்பட்டி உயிரியல் பூங்காவில் ரூபாய் 50 லட்சம் மதிப்பீட்டில் பூங்கா மேம்பாட்டுப் பணிகள் மற்றும் காட்டு மாடுகளுக்கான கூடாரம் அமைக்கும் பணிகளுக்கும் என மொத்தம் இன்று நடைபெறுகின்ற விழாவில் ரூபாய் 15 கோடியே 66 லட்சம் மதிப்பீட்டில் 5 புதிய திட்டப் பணிகளுக்கு என்னால் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி பல திட்டங்களை அம்மாவின் அரசு நிறைவேற்றியிருக்கிறது, அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது என்ற செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு அம்மாவினுடைய அரசு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் விதத்தில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருக்கிறோம்.

விலையில்லா கறவை மாடுகள் வழங்குவதன் மூலமாக, சிறு, குறு விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள வாய்ப்பாக இருக்கிறது. இன்றைக்கு, தமிழ்நாட்டிலேயே அதிக பால் கொள்முதல் செய்கின்ற பால் பண்ணை சேலம் பால் பண்ணை. அது தொடர்ந்து முதலிடத்தில் இரக்கின்றது. அதுபோல, நம்முடைய சேலம் மாவட்டத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் காவிரியிலிருந்து வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் இருந்த காலத்திலும் சரி, அம்மா அவர்கள் மறைவிற்குப் பிறகு அம்மா அவர்களின்

ஆட்சியிலும் சரி, அம்மா அவர்களால் போடப்பட்ட திட்டங்கள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. 2011–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக பதவியேற்றபோது நான் எடப்பாடி சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்று அப்பொழுது எடப்பாடி மக்கள், எடப்பாடி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதியில் கல்லூரி கட்டிக் கொடுங்கள் என்று வைத்த கோரிக்கையை ஏற்று அம்மா அவர்களிடம் தெரிவித்தவுடன், நம்முடைய பகுதிக்கு எடப்பாடியில் இருந்து சங்ககிரி செல்லும் வழியில், ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை உருவாக்கித் தந்தார்கள், அதற்கு ரூபாய் 10 கோடியில் புதிதாக கட்டடம் கட்டித் தந்தார்கள். மேலும், அதனை விரிவுபடுத்துவதற்கு கிட்டத்தட்ட 12 வகுப்பு அறை கட்டவதற்கு இப்பொழுது 5 கோடி கொடுத்திருக்கிறோம். அடுத்த ஆண்டில், அங்கே இரண்டாயிரம் மாணவ, மாணவியர் கல்வி கற்கக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். இது மிகப்பெரிய வரலாறு. அதேபோல, சங்ககிரி, எடப்பாடி, மேட்டூர் ஆகிய மூன்று பகுதிக்கும் மையப் பகுதியாக இருக்கக்கூடிய நங்கவள்ளி தொகுதியில், வனவாசி பகுதியில் ஒரு பாலிடெக்னிக் கல்லூரியை ஐந்து மாதத்திற்கு முன்பு நான் துவக்கி வைத்தேன். அங்கும் கிட்டத்தட்ட இரண்டாயிரம் மாணவ, மாணவியர் சேர்ந்து படிக்கக்கூடிய ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கியிருக்கிறோம். ஆகவே, நம்முடைய பகுதியில் ஏழை, எளிய குடும்பத்தை சேர்ந்த மாணவர்கள் கிட்டத்தட்ட 4000 பேர் உயர்கல்வி படிக்கக்கூடிய சூழ்நிலையை அம்மா அரசு தான் உருவாக்கித் தந்திருக்கிறது. **எட்டிகொடைமேட்டில்** பி.டெக் கல்லூரி கட்டிக் கொண்டிருக்கிறார்கள், வரும் நடப்பாண்டில் அங்கேயும் பி.டெக் கல்லூரி திறக்கப்பட்டு, ஏழை மாணவ, மாணவிகள் பி.டெக் படிக்கக்கூடிய சூழ்நிலை உருவாக்கித் தந்திருக்கிறோம்.

2011–க்கு முன்பு எடப்பாடி சட்டமன்றத் தொகுதி எப்படியிருந்தது, இப்பொழுது உங்கள் ஆதரவில் நான் சட்டமன்ற உறுப்பினராகி அமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நம்முடைய தொகுதியில் சாலைவசதி எப்படியிருக்கிறது என்று எண்ணிப் பார்க்க வேண்டும். எடப்பாடி நகரம்,

கொங்கணாபுரம், ஆகிய பகுதிகளில் புறவழிச் சாலை அமைக்கப்பட்டு, கனரக வாகனங்கள் செல்லக்கூடிய சூழ்நிலையை நாங்கள் உருவாக்கித் தந்திருக்கிறோம். **காரமங்கலத்திலும்** புறவழிச்சாலை அமைக்குப் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எடப்பாடியில் அருமையான மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். கொங்ணாபுரம், சித்தூர், நங்கவள்ளி ஆகிய இடங்களில் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை கட்டிக் கொடுத்திருக்கிறோம். பல இடங்களில், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை கொடுத்திருக்கிறோம். கால்நடை மருத்துவமனை கொடுத்திருக்கிறோம். இந்தியாவிலேயே தமிழகம் மருத்துவ சேவையிலே முதலிடம் வகிக்கின்ற அளவிற்கு சிறப்பான பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏழை, எளியவர்களுக்கு பசுமை வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோயில்களையெல்லாம் புனரமைக்கிறோம். எடப்பாடி நஞ்சுண்டேஸ்வரர் கோவில் புனரமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே திருமண மண்டபமும் கட்டியிருக்கிறோம். அங்கே மார்க்கெட் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எடப்பாடி நகர மக்களுக்காக பூங்கா அமைக்கும் பணியும் தொடங்கப்பட்டு இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு, அனைத்து மக்களுக்கும் பொங்கல் பரிசு கொடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு டிராக்டர் கொடுத்தோம். இவையெல்லாம் அம்மாவின் ஆட்சியில் செய்த திட்டங்கள். விவசாயிகள், நிலத்தடி நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும் என்பதற்காக சொட்டுநீர் பாசன கருவிகளை விவசாயிகளுக்குத் தருகிறோம். ஒரு ஏக்கர் நிலம் வைத்திருந்தால் முழுவதும் மானியமாக கொடுக்கிறோம். அதற்கு மேல் எத்தனை ஏக்கர் வைத்திருந்தாலும் அவர்களுக்கு 75 சதவீதம் மானியம் அளிக்கிறோம்.

இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் பொதுவிநியோகத் திட்டம் சிறப்பாக இயங்குகிறது. இந்தியாவிலேயே சட்டம் ஒழுங்கு சிறப்பாக இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடு தான் என்று அதற்கு இந்தியா டுடே என்ற ஆங்கில நாளிதழ் நமக்கு விருது கொடுத்திருக்கிறார்கள்.

எனவே, அம்மாவின் அரசு மக்களுக்காக உள்ள அரசு, இது மக்களின் அரசு, மக்களுக்குத் தேவையான திட்டங்களை வழங்குகின்ற அரசு அம்மாவின் அரசு என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டு, சேலம் மாவட்டம் முழுவதும் பல்வேறு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதை சுட்டிக்காட்டி, இந்த நிகழ்ச்சிக்கு சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், அவரோடு துணை நின்ற அதிகாரிகளுக்கும், அனைத்து பயனாளிகளுக்கும், மற்றும் அனைவருக்கும் நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

---

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**